10/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 171 சனிக்கிழமை நவம்பர் 11 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## 2,100 ஆசிரியர்களை இணைக்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 11

2 ஆயிரத்து 100 ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ள தரம் 13 வரையான தொழில் கற்கைநெறி பாடத்துக்கு தமிழ், சிங்கள மொழி மூலமாகக் கற்பிக்கவே புதிய ஆசிரியர்கள் இணைக்கப்படவுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சேவையில் தரம் III-I தரத்திற்கு பட்டதாரிகள் 2 ஆயிரத்து 100 பேர் இணைத்துக் கொள்ளப் படுவர் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள் ளது. (அ)

## யாழ். சிறுவன் விபத்தில் பலி

திருகோணமலை, நவ.11

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை வீதியில் மஹதிவுல்வெவ குளத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுவன் உயிரிழந்தான்.

தென்மராட்சி - மீசாலையைச் சேர்ந்த நகுலன் தசுதரன் (வயது - 7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பட்டமளிப்பு விழாவுக்கு தாயாருடன் சென்று திரும்பியபோது சிறுவன் வீதியைக் கடக்க முயன்றபோது வவுனியாவில் இருந்து திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ் சிறு வனை மோதிவிட்டு நிற்காது சென் றுள்ளது.

மொறவெவ பொலிஸார் பஸ்ஸை பின்தொடர்ந்து சென்று சாரதியை கைது செய்தனர்.



# இடமில்லை

## போரக் குற்ற விசாரணைக்கும் வெளிநாட்டு நீதிபதிகளுக்கும்

**இராணுவ அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி உறுதி**

கொழும்பு, நவம்பர் 11

'நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை போர்க் குற்றச்சாட்டுக்காக இராணுவத்தை நீதிமன்றில் நிறுத்தவோ, வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணை செய்யவோ ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்"

– இவ்வாறு இராணுவத்தினருக்கு உறுதியளித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கட்டளையிடும் அதிகாரிகள், மேஜர் தர அதிகாரிகள் 350 பேரை நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இராணுவ மருத்து வமனையில் ஜனாதிபதி சந்தித்தார். இதன்போதே இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார்.

இராணுவத் தளபதி, லெப்.ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க, பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரட்ண வின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இச்சந்திப்பில் கலந்து 06


## தின்பண்டங்கள் விற்பனை ரயில்களில் இனி இல்லை!

கொழும்பு, நவ.11

ரயில்களில் இடம்பெறும் வர்த்தக நடவடிக் கைகள் அனைத்துக்கும் தடைவிதிக்கப்பட்டுள் ளது. ரயில்வே திணைக்களம் விசேட அறிக்கை மூலமாக இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

ரயில்களில் பயணிக்கும் பொதுமக்களுக்கு தின்பண்டங்கள் மற்றும் பொருட்களை பலர் விற்பனை செய்து வருகின்றனர். இந்த நடவடிக்கையில் ஈடுபடுபவர்களில் சிலர் திருட்டுக்களுக்கும் காரணமாக 06

## முன்மொழிவு நடைமுறையாகிறதா? ஆராய தனிக்குழு அமைக்கப்படும்



கொழும்பு, நவ.11

வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட யோசனை கள் நடைமுறைப்படுத்தப்படு கின்றனவா என ஆராய தனிக் குழு அமைக்கப்படும்.

அத்துடன் எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பிலும் கொள்கை ஒன்று எதிர்வரும் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப் படும் என நிதி அமைச்சர் மங் கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் செய்தியாளர்க ளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

2019 ஆம் ஆண்டளவில் அரச வங்கிகள் தனது மூலத னத்தின் மூலம் இயங்கும் நிறுவ னங்களாக மாற்றப்படும். இந்த வருடம் முதல் இதற்கான திட் டம் நடைமுறைப்படுத்தப்படும்.

தொழில் கல்வியை மேம் படுத்தி புதிய கடன் திட் டத்தை அறிமுகப்படுத்த 06

## காணிகளை விடுவியுங்கள்

### ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்

கொழும்பு, நவ. 11

இராணுவம் ஆக்கிரமித் துள்ள கேப்பாப்பிலவு மக் களின் காணிகளை விரை வில் விடுவிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கேப்பாபிலவு காணிக ளில் இராணுவம் தொடர்ந் தும் தங்கியிருப்பதை நியாயப்படுத்த முடியாது. மக்கள் தமது மூதாதையர் வாழ்ந்த காணிகளுக்கு பதிலாக மாற்றுக் காணி களை பெறவோ அல்லது நட்டஈட்டைப் பெறவோ விரும்பவில்லை. அவர் களுக்குரிய உரிமை மிக 06



## தொண்டமானாற்றில் வெள்ளப்பெருக்கு அபாயம்

### நேற்றிரவு முதல் மக்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், நவ.11

தொண்டமானாறு கடனீரே ரியில் நீர் மட்டம் சடுதியாக உயர்வடைந்து செல்வதால், குறித்த நீரேரியின் அயலோ ரமாக வசிக்கும் மக்களை அவ தானமாக இருக்குமாறு நேற் றிரவு திடீர் எச்சரிக்கை விடப் பட்டது. வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக் 06

## மழை தொடரும்


கொழும்பு, நவ.11

வங்காள விரிகுடாவுக்கு தென்மேற்கே தாழமுக்கம் ஏற்பட்டுள்ளமையால் இடி யுடன் கூடிய மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறி வித்துள்ளது.

பிற்பகல் 2 மணிக்குப் பின்னரே மழை அல்லது இடியுடன் கூடிய மழை 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெற்செய்கைக்காக கட்டுக்கரைக் குளம் திறக்கப்பட்டது



மன்னார், நவ.11

வறட்சியால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தில் கன மழை பெய்து வரு கின்றது. இதனால் விவசாயிகள் கால போக நெற்செய்கையை ஆரம்பித்துள் ளனர்.

இந்நிலையில் மன்னாரின் பிரதான குளமான கட்டுக்கரைக் குளத்தில் போதிய நீர் இருப்பதாலும், நீர் வரத்து இருப்பதாலும் விவசாய தேவைகளுக்காக நீர் திறந்து விடப்பட்டுள்ளது என முருங்கன் பிராந்திய நீர்ப்பாசன பிரதான பொறியியலாளர் பி.ஐதீஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில காலமாக மன்னார் பகுதியில் கடும் வறட்சி நீடித்தது. இதனால் சிறுபோக நெற் செய்கையை விவசாயிகள் கைவிட்டிருந்தனர். இந்நிலையில் காலபோக நெற்செய்கைக்காவது மழை வருமா என்று எதிர்பார்த்திருந்தனர்.

கடந்த வாரம் முதல் மன்னாரில் மழை பெய்ய ஆரம்பித்ததைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட விவசாயிகள் நெற்செய்கைக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு, நெல் விதைப்பில் ஈடுபட்டனர்.

இதையடுத்து நடந்த கலந்துரை யாடல்களைத் தொடர்ந்தும், கட்டுக் கரைக்குளத்தில் 8 அடி 6 அங்குலம் நீர் இருப்பதால் விவசாயத்துக்கான நீர் திறந்து விடப்பட்டது.

இதேவேளை, கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 162 ஊட்டக்குளங்கள் இருக்கின்றன. இதில் சுமார் நூறு குளங்களின் கீழ் சட்ட விரோத நெற்செய்கை மேற்கொள்ளப்ப டுகின்றது. அடுத்துவரும் நாட்களில் மழை வீழ்ச்சி பொய்த்து விட்டால் அனைத்து விவசாயிகளும் பாதிப்பு அடையும் நிலை உருவாகும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.



## ஆச்சரியம் ஏற்படுத்திய முட்டைக்கோஸ்

கண்டி, நவ. 11

மலையகத்தில் விளைந்த முட்டைகோஸ் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

12 கிலோவுக்கும் அதிக எடை கொண்ட இந்த முட்டைகோஸ் ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் விளைந்துள்ளது. மரக்கறி முகவரான விஜயகோன் பண்டா என்பவர் இந்த அதிசய முட்டைகோஸை பெற்று, கார்கில்ஸிடம் வழங்கியுள்ளார்.

கண்டியைச் சேர்ந்த ஒருவர் இந்த முட்டைகோஸை ஆயிரத்து 200 ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளார். இவ்வளவு பெரிய முட்டைகோஸ் முன்னர் உற்பத்தியானதா? இது சாதனை படைத்துள்ளதா என்பது குறித்த விடயங்கள் வெளியாகவில்லை.

காட்சிப்படுத்தப்பட்ட இந்த முட்டைகோஸை பெருமளவிலான மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

## ஜனாதிபதி – பிரதமர் இரகசிய சந்திப்பு



கொழும்பு, நவ.11

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் பிரத மர் ரணில் விக்கிரமசிங் கவும் இரகசியப் பேச்சு ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் வாசஸ் தலத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது.

அரசியலில் ஏற்பட் டுள்ள திடீர் மாற்றம் மற்றும் இக்கட்டுநிலை குறித்து இருவரும் பேசியுள்ளனர். இது தற் போதைய அரசியல் நிலை யில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மகிந்த அணி – பொலிஸார் முறுகல்!



கொழும்பு, நவ.11

சைக்கிளில் நாடாளுமன்றம் சென்ற மகிந்த அணியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. இதற்கு மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றுக்குள் செல்ல விடாது தடுத்ததன் மூலம் 'அரசாங்கம் மீண்டும் மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மீறுகிறது" என்றும் அவர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

நாடு முழுவதும் பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது மகிந்த அணியினர் சைக்கி ளில் நாடாளுமன்றம் சென்றிருந்தனர். இவ்வாறு சென்றவர்களை நாடாளுமன்றப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து ஏற்பட்ட முரண்பாடு முறுகல் நிலையை உருவாக்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மாமனிதர் ரவிராஜின் நினைவுதினம் அனுஷ்டிப்பு




சாவகச்சேரி, நவ.11

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 11 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக அமைக் கப்பட்ட அவரின் சிலையருகே சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சி.துரைராஜா தலைமை யில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சாவகச் சேரி தொகுதிக் கிளை தலைவர் க.அருந்தவபாலன், வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், ஆதரவாளர் கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## வரவு – செலவுத் திட்டம்: தமிழருக்கு நன்மையளிக்கும்

### சம்பந்தன் வரவேற்பு

கொழும்பு, நவ.11

தமிழ் மக்களுக்கும், நாட்டின் அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக் கும் வகையில், அரசாங்கத்தின் வரவு -செலவுத் திட்டம் அமைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம் பந்தன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன் தினம் நிதியமைச்சர் மங்கள சமரவீர 2018 ஆம் ஆண்டுக்கான வரவு -செல வுத் திட்டத்தை சமர்ப்பித்தார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

"யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர் கள் உட்பட தமிழ் மக்கள், அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கும் வகை யில் அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்திருக்கிறது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக் கங்களை ஆழமாக அவதானிக்க வேண்டியுள்ளது." என்றார்.

## வெலிக்கடை சிறைக் கலவரம்: பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

கொழும்பு, நவ.11

வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்த, காயமடைந்த வர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கவுள்ளது.

உயிரிழந்த கைதி ஒருவரின் குடும் பத்துக்கு 20 இலட்சம் ரூபாவும், காயம டைந்த கைதி ஒருவருக்கு 5 இலட்சம் ரூபாவும் நட்டஈடாக வழங்கப்பட வுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு வெலிக் கடை சிறையில் இடம்பெற்ற கலவரத் தில் 27 கைதிகள் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

இக்கலவரத்தில் உயிரிழந்த 10 பேரின் குடும்பங்களுக்கும் காயமடைந்த ஐவரின் குடும்பங்களுக்கும் இதுவரை நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீடு வழங்கப் படாத ஏனையோருக்கு நட்டஈடு வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பணித்துள்ளார்.

## கஸ்ரப் பிரதேச பாடசாலைகளுக்கு நடமாடும் விஞ்ஞான உபகரண சேவை

கொழும்பு, நவ. 11

மாணவர்கள் குறைவாகக் காணப்படும் கஸ்ரப் பிரதேசங்களில் இருக்கும் மூவாயிரம் பாடசாலைகளுக்கு "நடமாடும் விஞ்ஞான உபகரணங்கள்" வழங்க நடவடிக்கை எடுக் கப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரிய வசமின் ஆலோசனைக்கு அமைய கல்வி அமைச்சு இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

எதிர்வரும் 5 வருடங்களுக்கு தேவை யான உபகரணங்கள் மற்றும் இரசாயன பொருட்கள் இதில் அடங்கும். இதன்ப டி, வடக்கு மாகாணத்தில் 249 பாடசாலை களுக்கும், கிழக்கு மாகாணத்தில் 322 பாடசாலைகளுக்கும், மேல் மாகாணத் தில் 448 பாடசாலைகளுக்கும், மத்திய மாகாணத்தில் 440 பாடசாலைகளுக் கும், தென் மாகாணத்தில் 306 பாடசாலைக ளுக்கும், வட மேல் மாகாணத்தில் 403 பாடசாலைகளுக்கும், வட மத்திய மாகா ணத்தில் 173 பாடசாலைகளுக்கும், ஊவா மாகாணத்தில் 249 பாடசாலை களுக்கும், சப்ரகமுவ மாகாணத்தில் 410 பாடசாலைகளுக்கும் இந்த நடமாடும் விஞ்ஞான உபகரண சேவை நடத்தப் படவுள்ளது. இந்த திட்டத்திற்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
சனி, 11 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# கொலையாளிகளைக் காப்பாற்றல்

"நாட்டின் தலைவராக நான் இருக்கும் வரைக்கும், எந்தவொரு போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன்னாலும் உங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று உறுதியாக கூறுகிறேன். வெளிநாட்டு நீதிபதிகள் போன்றவர்கள் எவரையும் விசாரணை செய்ய அனுமதிக்கமாட்டேன். உலகின் எந்த மனித உரிமை அமைப்புகளும், எந்த அடிப்படையிலும், இலங்கை இராணுவத்தை கட்டுப்படுத்த முடியாது" இவ்வாறு படையதிகாரிகளிடம் மீண்டுமொருமுறை உறுதியாகக் கூறியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நல்லாட்சியின் தலைவரான மைத்திரி, நாட்டு மக்கள் அனைவரையும் ஒரு தட்டில் வைத்துப் பார்ப்பவராகவும், சமநீதியை வழங்குபவராகவும் இருக்கவேண்டும். ஆனால் அவரும் மகாவம்ச மனோபாவத்தோடேதான் தன் ஆட்சியைத் தொடர்கின்றார். இல்லாவிட்டால் இவ்வாறு துணிந்து ஒரு உறுதிமொழியை வழங்கியிருக்க மாட்டார். எப்பாடுபட்டாவது போர்க்குற்றங்களில் இருந்து படையினரைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற முனைப்பே அவரது பேச்சில் தொக்கி நிற்கிறது.

இறுதிப் போரின் போது, ஆயுதமுனையில் குறுக்கப்பட்ட ஒரு சதுப்புநிலத்துக்குள் இலட்சக்கணக்கான மக்களைச் சுற்றிவளைத்து வைத்துக் கொண்டு, தன்னிஷ்டப்படி சர்வதேசப் போர்விதிகள் அத்தனையையும் தூக்கிச் சாப்பிட்டுவிட்டு, கொலைத் தாண்டவம் புரிந்தன இலங்கைப் படைகள். புலிகளுடனான போரின் போதே பொதுமக்கள் இடையே சிக்கிச் செத்தனர் என்று சொல்லி அரச படைகள் தப்பித்துவிட முடியாது . ஏனெனில் புலிகள் தங்களுடைய ஆயுதங்களை மௌனித்த பின்னர்தான் – அரசின் கட்டுப்பாட்டுக்குள் முழு நிலப் பகுதியும் கொண்டுவரப்பட்ட பின்னரே– இசைப்பிரியா முதல் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். இதவிட போர் நடைபெற்ற காலத்திலும் புலிகளின் நிலைகளை விடவும் படையினரின் எறிகணைகளும், விமானக் குண்டுகளும் மக்கள் குடியிருப்புகளையே அதிகம் இலக்கு வைத்துப் பாய்ந்து உயிர் குடித்தன.

இந்தப் படுகொலைகள் தொடர்பான புகைப்பட, வீடியோ சாட்சியங்கள் கூட ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும் போர் முடிந்து, 8 வருடங்களான பின்னரும் ஒரு படைவீரர் தானும் மனித உரிமைகளை மீறி மக்களைக் கொன்றமைக்காகத் தண்டிக்கப்படவில்லை. கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுதானும் கொடுக்கப்படவில்லை. மாறாக "இவ்வளவு ஆயிரம் பேர் இறக்கவில்லை, மிகச் சிலரே கொல்லப்பட்டிருக்கலாம்" என மிகச் சாதாரணமாக ஒரு இனப்படுகொலையினை மூடிமறைக்கவே அரசு முனைகிறது.

மகிந்த காலத்தில் கொல்லப்பட்ட வசிம் தாஜுதீன் என்னும் ஒற்றை மனிதனின் மரணத்துக்கே நீதி வழங்கத் துடிக்கின்ற நல்லாட்சி அரசு, கூண்டோடு ஆயிரக்கணக்கான மக்களை வார்த்தைகளில் சொல்லமுடியாத வதை செய்து கொன்றவர்களை எப்பாடுபட்டேனும் காப்பாற்றத் துடிக்கின்றது.

கோத்தபாயவின் ஏவுதலால் கொல்லப்பட்ட வெலிக்கடைக் கைதிகளுக்கு 10 லட்சம் நஷ்ட ஈட்டைக் கூவிக் கூவி வழங்குகின்ற இதே அரசுதான், போரில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கோ, போரால் அவயவங்களை இழந்தோருக்கோ ஒரு சதம் கூடக் கிள்ளி எறியவில்லை.

மகாவம்சக் கண்களால் இலங்கையைப் பார்க்கும் ஒவ்வொரு ஆட்சியாளரும் இப்படித்தான் நடப்பார்கள். அதற்கு மைத்திரி மட்டும் விதிவிலக்கா என்ன? தமிழர்களாகப் பிறந்ததால், மறுக்கப்படும் நீதி குறித்து அலட்டிக் கொள்ளக் கூடாது. இதுவே காலமும், சிங்கள ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாக நமக்குத் தருகின்ற படிப்பினைகள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தொடர்ந்தும் பின்னடிக்கிறது இலங்கை ஒட்டாவா பிரகடனத்தில் கைச்சாத்திட

கொழும்பு, நவ. 11

கண்ணிவெடிகளை தடை செய்யும் சர்வதேச பிரகடனமான ஒட்டாவா பிரகடனத்தில் கைச்சாத்திட பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரட்ண மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்களின் பாதுகாப்பை காரணம் காட்டியே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பாதுகாப்பு அமைச்சு இப்போதும் மறுத்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான அனுமதியை கடந்த மார்ச் மாதம் அமைச்சரவை வழங்கியிருந்தது. ஆனால் பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் தொடர்ந்தும் பின்னடிப்பதாக கூறப்படுகின்றது.

கண்ணிவெடி தவிர்ப்புக்கான இந்த ஒப்பந்தத்தில் 160 நாடுகள் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் மிதக்கும் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். குடாநாட்டில் நேற்றுக் காலை முதல் விடாமல் பொழியும் அடைமழையால் பலபகுதிகள் வெள்ளத்தில் மிதப்பதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாகத் தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்களே இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை இன்றும் நீடித்தால் வடமராட்சி கிழக்கு, யாழ்.மாநகரக் கரையோரப் பகுதி , தொண்டமானாற்றுக் கரையோரம் போன்ற வற்றில் வசிக்கும் மக்கள் வெள்ளத்தால் பெரும் பாதிப்பை எதிர் கொள்வர் எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் - காரைநகர் வீதியில் கல்லுண்டாய் சந்தியிலிருந்து அராலி வடக்கு வரையான பகுதியில் வீதிக்கு மேலால் வெள்ளம் பாயும்நிலை ஏற்பட்டுள்ளது. வழுக்கையாற்று வாய்க்காலின் நீர் மட்டம் அதிகரித்தமையே இந்த நிலைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. வழுக்கையாறு வாய்க்காலின் 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டு குடாக் கடல் நீரேரியில் வெள்ளம் விடப்பட்டுள்ளது. அதேபோன்று தொண்டமானாற்றின் 14 கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. (அ)

# சோடாவை விட பியரை தாராளமாக அருந்தலாம்

## மங்களவின் ஐடியா இது!

கொழும்பு, நவ.11

மென்பானங்கள் அருந்துவதை விடவும் பியர் அருந்துவது சிறந்தது என நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி, பியருக்கான வரிக் குறைப்புத் தொடர்பில் கேள்வியொன்றை எழுப்பிய போதே அமைச்சர் மங்கள மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"மென்பானங்களில் சீனியின் ஒரு சதவீதத்துக்கு 20 சதம் வீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. எனினும் பியருக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் பியர் தயாரிப்பின் போது ஒரு நாளைக்கு 300 மூடை சீனி பயன்படுத்தப்படுகிறது" என்று ஹந்துன்னெத்தி குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மங்கள சமரவீர, "வெளிநாடுகளில் பொதுவாக அதியுச்ச காரம் கொண்ட மதுபானங்களுக்குப் பதிலாக குறைந்த காரம் கொண்ட பியரையே அருந்துகின்றனர். குறிப்பாக பியர் அருந்தும் வீதம் வெளிநாடுகளில் அதிகரித்துள்ளது. இதன் காரணமாகத்தான் அதிகூடிய காரம் கொண்ட மதுபானங்களுக்கான வரியை அதிகரித்துள்ளதுடன் பியருக்கான வரியைக் குறைத்துள்ளோம்.

எனினும் மென்பானங்களை பொறுத்தவரை மாணவர்கள் அருந்தும் 40 மில்லிலீற்றர் மென்பானத்தில் 100 வீதம் சீனி சேர்க்கப்படுகின்றது. இது பாரதூரமான விடயம். மென்பானங்கள் அருந்துவதனை விடவும் பியர் அருந்துவது சிறந்தது.

சவுதிஅரேபியா போன்று நாமும் மதுபானத்தை முற்றாகத் தடை செய்வோம் அல்லது குறைந்த போதையுள்ள பியர் போன்ற பானங்களை நாட்டில் அறிமுகம் செய்வோம்.

சவுதி அரேபியாவைப் போன்று, கை வெட்டுவது, கால் வெட்டுவது, கழுத்து வெட்டுவது போன்ற சட்டங்களை இங்கும் கொண்டுவர வேண்டும்.

கொழும்பு பல்கலைக்கழகம் அண்மையில் நடாத்திய ஆய்வொன்றின் படி நாட்டில் 49 வீதமானவர்கள் கசிப்பு குடிக்கின்றனர் எனவும் சாதாரண மதுபானம் பயன்படுத்துபவர்களில் 84 வீதமானவர்கள் அதிக காரமான மதுபானத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பது தெரியவந்துள்ளது. சிறியளவில் மதுபானம் அருந்துவது தவறில்லை யென்பதே எனது நிலைப்பாடு" என்றார். (அ)

# குழந்தைகளை குறைவாகப் பெறுவது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்

## வட மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன்

கொழும்பு, நவ.11

தமிழ்க் குடும்பங்கள் பல வருடங்களுக்கு முன்னர் சராசரியாக ஐந்து பிள்ளைகளைக் கொண்டிருந்தன. ஆனால், இப்போது தமிழ்க் குடும்பங்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள விரும்புவதில்லை. தமிழர்கள் குழந்தைகளைக் குறைவாகப் பெற்றுக் கொள்வது எதிர் காலத்தில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும்.

இப்படித் தெரிவித்திருக்கிறார் வட மாகாணசபை உறுப்பினர் பொ. ஐங்கரநேசன்.

கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை பரிசளிப்பு நிகழ்சி நேற்று நடைபெற்றது. அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பொ.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயின்ற பல பாடசாலைகளில் இன்று முப்பது, நாற்பது மாணவர்களே பயின்று கொண்டிருக்கின்றனர். மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவால் பல பாடசாலைகளை மூடிவிடலாம் என்ற கருத்துக்கள்கூட முன் வைக்கப்படுகின்றன.

யுத்தத்தால் ஒருபுறம் பெருந்தொகை தமிழ்மக்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து போக, இன்னொருபுறம் இனப்பெருக்க வீரியம் உள்ள ஒரு தலைமுறை இளம்சந்ததியும் போரில் அழிந்து போயுள்ளது. இதனால், எங்களது சனத்தொகை குறைந்து வருகிறது. இருக்கின்ற குடும்பங்கள்கூட பல்வேறு காரணங்களால் இரண்டுக்கு மேல் குழந்தைகளைப் பெற விரும்பவில்லை. இதுவே பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்வதற்கான பிரதான காரணமாக உள்ளது.

இன்று எண்ணிக்கையே சகல விடயங்களையும் தீர்மானிக்கும் பிரதான சக்தியாக உள்ளது. உண்மையானதா, நீதியானதா, சரியானதா, பிழையானதா என்று பார்க்காமல் பொய்க்கும், அநீதிக்கும், பிழையான விடயங்களுக்கும் பெரும்பான்மைப் பலம் இருந்தால் அது பெருவெற்றி பெற்று விடுகிறது. தமிழ் மக்கள் குழந்தைகளை அதிகளவில் பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டாது விட்டால் விரைவில் இலங்கைத் தீவில் சிறுபான்மையிலும் சிறுபான்மையாகத் தமிழினம் மாற வேண்டிய அவலநிலை ஏற்படும் -என்றார்.

## இன்று நாளும் கோளும்

11.11.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 25 ஆம் நாள்

அஷ்டமி காலை 06.36 மணி வரை | ஆயிலியம் பி.ப. 04.58 மணி வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 09.00 – 10.30 | சுபநேரம் 10.45 – 11.45 | எமகண்டம் 01.30 – 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரமம் | சிந்தனை | குழப்பம் | நம்பிக்கை | நற்செயல் | உதவி | சுகம் | சாதனை | சோர்வு | அனுகூலம் | ஆர்வம் | அலைச்சல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறவுகள் தொடர்கதை

கொழும்பு, நவ.11

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனா பொறுப்பேற்பதால், இந்திய - இலங்கை உறவில் பாதிப்பு ஏற்படாது என்று இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் ரஜேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

"இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் உள்ளன. இதனால் சீனா அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பொறுப்பேற்கின்றமை, இந்திய - இலங்கை உறவில் தாக்கத்தைச் செலுத்தாது" என்று அவர் டைம்ஸ் ஒப் இந்தியாவுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பதவியேற்றார் பியசேன



கொழும்பு, நவ.11

நீதிமன்ற உத்தரவால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிழந்த கீதா குமாரசிங்கவின் இடத்துக்கு நியமிக்கப்பட்ட பியசேன கமகே, சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினரான நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டம் நேற்று ஆரம்பமானதும் பியசேன கமகே சத்தியப் பிரமாணம் செய்துக்கொண்டதை தொடர்ந்து அவர் ஆளும் கட்சியின் வரிசையில் அமர்ந்துகொண்டார். (அ)

# தாய்லாந்துடன் வர்த்தகம்

## பேச்சுவார்த்தை ஆரம்பம்

கொழும்பு, நவ.11

இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகத் தாய்லாந்துத் தூதுவர் சூலாமணி சாட்சுவான் தெரிவித்துள்ளார்.

'இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் அவர் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனத்தில் இடம்பெற்றது. (இ)

# இரவில் இளைஞர் குத்திக் கொலை

மாத்தறை, நவ.11

மாத்தறை - கபடா வீதி பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இளைஞரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மாத்தறை - நுபே பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த கொலையினை மேற்கொண்ட சந்தேக நபரைத் தேடிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# இரத்த ஆறு ஓடுமெனில் எப்படி நாம் இணைவது?

## மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு, நவ.11

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடி பாலம் தொடக்கம் மஞ்சந்தொடுவாய் வரையான பகுதியை நகரசபையாக உருவாக்கக் கோரியும் குறித்த பகுதியில் உள்ள சில பகுதியை காத்தான்குடி நகரசபையுடன் இணைப்பதை நிறுத்துமாறு கோரியும் மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணி மற்றும் அப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர்.

மட்டக்களப்பு கல்லடி, உப்போடை சிவானந்தா விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள் குறித்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

"கல்லடியை தனி நகரசபையாக மாற்றுங்கள்", "அரசே தமிழர்களின் ஓலம் உங்களது காதுகளில் கேட்கவில்லையா?", "தமிழர்கள் இனவாதிகள் அல்ல", "வடக்கு, கிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடும் என்பவர்களுடன் எவ்வாறு இணைவது?" போன்ற பதாகைகளை பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர். (ஆ)

# தாயின் சடலத்துக்கு காவலிருந்த குழந்தை



கொழும்பு, நவ.11

மர்மமான முறையில் உயிரிழந்த தாயின் சடலத்துக்குக் காவலாக இரு நாட்களாகத் தனிமையில் ஒன்றரை வயதுப் பெண் குழந்தை இருந்துள்ளது.

அம்பலாங்கொட, மாதம்பாகம, இடம்தொட்ட பிரதேசத்தில் வசிக்கும் விமுசிகா தில்கானி (வயது -22) என்ற பெண்ணின் கணவர் கடற்றொழிலாளி. அவர் கடந்த முதலாம் திகதி ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றுள்ளார். இதனால் குறித்த பெண் தாயாரின் வீட்டுக்குச் சென்று தங்கியுள்ளார். அங்கிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை அந்தப் பெண் தனது குழந்தையுடன் வீடு திரும்பியுள்ளார். வீடு வந்தடைந்ததும் அது தொடர்பில் தாயாருக்குத் தொலைபேசியில் அந்தப் பெண் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமை ஆகிய 2 நாட்களாக அந்தப் பெண்ணிடமிருந்து எந்தவொரு அழைப்பும் தாயாருக்குக் கிடைக்கவில்லை. தாயாரும் தொடர்புகொண்டபோது பெண்ணின் கைபேசி இயங்கவில்லை என்பது தெரியவந்தது.

அதனால் பதற்றமடைந்த பெண்ணின் தாயார், மகளின் வீட்டுக்கு நேற்று மாலை 4 மணியளவில் சென்றுள்ளார். வீட்டுக்குள் சென்றதும் அவர் அதிர்ச்சியடைந்தார்.

அவரது மகள் கட்டிலில் சடலமாகக் காணப்பட்டார். அவரது மூக்குப் பகுதியால் குருதி வெளியேறியிருந்தது. ஒன்றரை வயதுக் குழந்தை தாயாரின் சடலத்துக்கு அருகில் இருந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொட பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)



# சந்தேகம் ஒரு வில்லங்கமான வியாதி தெரியுமோ?

எதுக்கெடுத்தாலும் சந்தேகிக்கிறான் விநாசி எண்டு கோவிக்காதையுங்கோ. சந்தேகம் ஒரு வில்லங்கமான வியாதி எண்டு தம்பி வாத்தியார் சொல்லித் தந்தவர். உடனை தீர்த்துப் போட வேணுமாம். இல்லாட்டி வளர்ந்து, வளர்ந்து ஆளைக் கொல்லும் எண்டும் சொன்னவர்.

வழமையாக் காலமையிலை ஒருக்கால் சைக்கிளை எடுத்துச் சந்திக்குப் போய் பேப்பரைப் பாத்திட்டு வராட்டிப் பொச்சம் தீராது. இண்டைக்கும் இந்த மழைச் சகதீக்கையும் ஒருக்காப் போட்டு வந்திட்டன். போனால் வழமையா வாறவையும் வந்து நேற்றைக்கு பாளிமென்றிலை நிதி அமைச்சராலை வாசிச்ச வரவு செலவு திட்டத்தைப் பற்றித்தான் ஒரே கதை.

முதலி சொன்னான், "திறமான பட்ஜட் அண்ணை" எண்டு. ஏனடா எண்டு கேட்டால் வடக்கைப் பற்றி கவனமெடுத்துச் செய்த திட்டமாம். அது மட்டுமில்லை கிளிநொச்சிப் பக்கத்திலை இருக்கிற ஆக்களுக்கு இன்னும் திறமாம். முன்னாள் போராளியளுக்கும் கனக்க வசதி செய்து குடுக்கப் போகினமாம். அதோடை பென்சன் எடுத்த ஆக்களுக்கும் ஏதோ புதுசா குடுக்கப் போகினமாம். அமைச்சர் மங்களவும் சொல்லி இருக்கிறார். இந்த பட்ஜட்டின்படி எங்கடை திட்டம் என்னெண்டால் "மீனைப் பிடிச்சுக் குடுக்கிறதில்லை. மீனைப் பிடிக்கக் காட்டிக் கொடுக்கிறது" எண்டு. தொழில் செய்ய யோசிக்கிற ஆக்களையும் அதிகம் ஊக்குவிக்கப்போறம். புது ஆக்களையும் உருவாக்கப் போறம். எண்டு கனக்கச் சொல்லி இருக்கிறார். அதோடை இன்னுமொரு பிரச்சினை உந்த லீசிங் கொம்பனியிலை நுண் கடன் எடுத்தாக்களுக்கும் ஏதோ வட்டி குறைஞ்ச கடன் குடுக்கப்போறதாயும் கேள்வி எண்டான் அவன்.

உடனை இராமுப் பிள்ளை நிண்டிட்டுச் சொன்னான், எங்கடை சீவியத்திலை உப்பிடி எத்தினை பட்ஜட்டைக் கண்டனாங்கள். என் எம் பெரேராவைவிட ஆரேன் வீரன் இருக்கிறானே பட்ஜட்டைப் போட. அந்த ஆள் இருக்கேக்கை எழுபதிலை ஒரு பட்ஜட் போட்டாரே அது தான் பட்ஜட். தெரியுமோ?

ஆளும் கட்சி பட்ஜட்டைக் கொண்டு வரேக்கை எதிர்கட்சி சொல்லும் உதிலை பிழை கிடக்குது. நாட்டுக்கு நல்லதில்லை. மக்களுக்குப் பிரியோசனம் ஒண்டும் இல்லை. சனத்தை சாக்காட்டிற பட்ஜட் எண்டு. ஆனால் பிறகு அவையள் ஆளுங்கட்சியா வரேக்கை அதைத்தான் செய்வினம். ஒட்டு மொத்தமா பொழுதைக் கழிச்சுப்போட்டுப் போவினம். சனம்தான் நடு ரோட்டிலை. என்ன ?

பட்ஜட் எத்தினை வந்து போட்டுது. ஒரு கதைக்குச் சொல்லு. நீ ஒரு கார்......இல்லை வேண்டாம், ஆகக் குறைஞ்சது ஒரு மோட்டச் சைக்கிள் எடுத்திருக்கிறியே? இல்லாட்டி நானாவது எடுத்திருக்கிறனே? அண்டைக்குத் தொடக்கம் இண்டுவரை ஒரு பழஞ் சைக்கிள்தான் இரண்டுபேரிட்டையும் இருக்கு. பழம் பாரை, பெட்டி, கடகம், சருகு பொறுக்கிற ஒரு குத்துசி. ஓலைக் கொட்டில் சீவியம். இதைவிட எங்கடை வாழ்க்கை ஏதேனும் ஒரு அடி முன்னாலை போயிருக்கே. எங்கடை கிராமத்துச் சனங்களின்ரை சீவியத்தை எழுப்பாத பட்ஜட் ஒரு பட்ஜட்டே?

ஒரு திறமான பட்ஜட் எண்டால் அதிலை நகரம் துவக்கம் கிராமம் மட்டும் நல்லா வரவேணும் எண்ட மாதிரித் திட்டம் இருக்க வேணும். எல்லாரும் சிங்கப்பூரிலை இருக்கிற ஆக்கள் மாதிரி சீவிக்கவேணும். ஏன் போன கிழமை கந்தசாமியின்ரை மருமோள் கனடாவிலை இருந்து வந்தவள். அங்கையுள்ள சீவியத்தைப் பற்றிச் சொன்னாள். கஷ்டம் தானாம். ஆனால் நினைச்சதைச் செய்து சனம் சந்தோஷமா இருக்கினமாம். அது தானே வேணும். எண்டு இராமுப்பிள்ளைசொல்லிப்போட்டுப் போனான்.

இராமுப் பிள்ளை போனாப் பிறகு அதைக் கேட்டுக் கொண்டு நிண்ட சிவராசா சொன்னான், பட்ஜட்டைத் திறம் எண்ணிறியள். அதென்ன சீவிய காலத்துக்கும் இருக்கப் போகுதே? எப்பவும் அவை திருத்தம் கொண்டுவந்து மாத்தலாம். அதுக்கு ஏன் சம்பந்தரும், சுமந்திரனும் சந்தோஷப் படுவான்? அவேன்ரை சந்தோஷம் என்னெத்துக்கெண்டு தெரியுமோ? இப்பதான் அரசியல் திருத்தச் சட்டம் வந்து ஊரிலை ஒரே கதையாக் கிடக்கு. அதிலை "ஏக்க இராஜ்ஜிய" எண்டொரு சொல்லுப் பாவிச்சிருக்கினமாம். அது சிலவேளை பிரச்சினையைக் கொண்டு வரலாமாம். அதை மறைக்கத்தான் உந்த விளையாட்டெண்டு கதைக்கினம்.

உடனை எனக்கும் பட்ஜட்டிலை சந்தேகம் வந்திட்டுது. இனி விநாசிக்கு வில்லங்கந்தான்?

**- வில்லங்கம் விநாசி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# DIMO kwWk lhl lh epWtdqfSld i fNfhuf Fk LIOC



லங்கா ஐ.ஓ.சி. (LIOC), Diesel & Motor Engineering PLC மற்றும் டாட்டா மோட்டர்ஸ் லிமிட்டட் இந்தியா ஆகிய மூன்று மிகப் பெரும் நிறுவனங்களும், டாட்டா மோட்டர்ஸ் அசல் இயந்திர எண்ணெயை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அறிவிப்பதையிட்டு பெருமிதம் அடைகின்றன. உயர்தரமான அடிப்படை எண்ணெய்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்க்கைகளை கொண்டு டாட்டா வாகனங்களுக்காக கலவை செய்யப்பட்ட, உயர் செலாற்றலுடைய புதிய தலைமுறை (ஏனைய பண்பியல்புகளுக்கு புறம்பாக CI4 Plus & 15w40) எண்ணெயாக இந்த எண்ணெய் காணப்படுகின்றது. அத்துடன் இவ்வகை எண்ணெய் இந்நிறுவனங்களின் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் போட்டிகரமான விலையின் அடிப்படையில் கிடைப்பதாகவும் இருக்கும்.

இது ஒரு அசல் இயந்திர எண்ணெயாக காணப்படுவதுடன், ஐ.ஓ.சி. தொழில்நுட்பத்தின் துணையுடன் டாட்டா டீசல் என்ஜின்களுக்காக வடிவமைக்கப்பட்டதாக திகழ்கின்ற அதேநேரத்தில், DIMO நிறுவனத்தின் நம்பிக்கை மற்றும் பரிந்துரையின் பக்க பலத்தையும் கொண்டுள்ளது. இதனை பயன்படுத்துவோருக்கு இந்த எண்ணெய் அதிகரித்த அளவிலான மைல்களுக்கு பயணிக்கும் ஆற்றல், என்ஜினின் நீண்ட ஆயுள், நீளமான எண்ணெய் மாற்றும் காலஇடைவெளி, என்ஜினில் தீப்பொறி ஏற்படும் நேரத்தில் கழிவு வெளியேற்றத்தை கணிசமானளவு குறைத்தல், மிகவும் வினைத்திறனான cam/tappet செயற்பாடு மற்றும் valve train wear பாதுகாப்புடன் கூடிய எண்ணெய் குறைவடைவதை கட்டுப்படுத்தும் மேம்பட்ட ஆற்றல் மற்றும் மிகச் சிறந்த புகைவெளியேற்ற கட்டுப்பாடு போன்ற பல அனுகூலங்களை வழங்குகின்றது. இதில் உள்ளடங்கியுள்ள மேம்பட்ட குளிர் காலநிலைக்கான உள்ளடக்கங்களின் காரணமாக, அனைத்து காலநிலையிலும் மிகச் சிறந்த செயலாற்றலை இது வழங்குகின்றது.

லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சியாம் பொஹ்ரா கருத்துக் கூறுகையில், வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த உற்பத்தி அறிமுகத்தில் ஒரு அங்கமாக திகழ்வதையிட்டும், டாட்டா மோட்டர்ஸ் லிமிட்டெட் மற்றும் டீமோ நிறுவனங்களுடன் ஒன்றிணைவதையிட்டும் தனது நன்றியறிதலை தெரிவித்தார். "இந்த அறிமுகமானது, இத்துறையுடன் தொடர்புபட்ட பங்குதார தரப்பினருக்கு போட்டிகர அனுகூலத்தையும் பெறுமதி உருவாக்கலையும் தோற்றுவிப்பதன் மூலம் இம் மூன்று பங்காளிகளுக்கும் அனுகூலமளிப்பதாகக் காணப்படுகின்றது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"டாட்டா இலங்கையில் நம்பர்-1 வணிகநோக்கு வாகன வர்த்தகக் குறியீடாக திகழ்கின்றது. எமது வாடிக்கையாளர்கள் தங்களது வாகனங்களின் நீடித்த பாவனையை ஊக்குவிக்கும் விதத்தில் அவர்கள் சிறந்த விற்பனை மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவைகளை அனுபவிப்பதை உறுதிப்படுத்துகின்ற விடயத்தில் நாம் கூடிய கவனம் செலுத்திச் செயற்படுகின்றோம். பரந்தளவான சேவைப் பரம்பல் மற்றும் விநியோக வலையமைப்புடன் இயங்கி வருகின்ற நாம், நாடு முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர்கள் இந்த உன்னத தரத்திலான உற்பத்தியை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கின்றோம்" என்று DIMO நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரஞ்சித் பண்டிதகே தெரிவித்தார்.

டாடா மோட்டர்ஸ் இந்தியாவின் மிகப் பெரிய வாகனக் கம்பனியாக திகழ்வதுடன், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட போக்கு மற்றும் தொழில்நுட்பம் ஆகிவற்றுக்கு மதிப்பதிப்பளிப்பதன் மூலம் சிந்தனைத் தலைமைத்துவத்தின் ஒரு நிரூபிக்கப்பட்ட மரபை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு வருகின்றது. டாட்டா மோட்டர்ஸ் இந்தியா நிறுவனமானது 1961ஆம் ஆண்டு DIMO நிறுவனத்துடன் பங்காளியாக கைகோர்த்ததன் ஊடாக சர்வதேச சந்தைக்குள் காலடி எடுத்து வைத்தது.

# cWjpahd nrawghl;bid njhlu;rrpahf nts pggLj;Jk nryhd tqfp

2017 செப்ரெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த 9 மாதங்களில் செலான் வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 3,002 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 6% ஆன ஒரு மிதமான வளர்ச்சியாகக் காணப்படுகின்றது. இழப்பீட்டுத் தீர்ப்பாயத்தில் இருந்தான நிலுவைத் தொகைக்கான மரபுரிமை செயற்படா சொத்துக்கள் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளே இந்தப் பெறுபேறுகளுக்கு காரணமாகி இருக்கின்றன.







முற்பணங்களில் ஏற்பட்ட வளர்ச்சியோடு இணைந்ததாக, வட்டி வீதங்கள் அதிகரித்ததன் மூலம் வட்டி வருமானம் 35% இனால் அதிகரித்தது. அதேநேரம், அதிக ஆதாயத்தை பெற்றுத் தரும் நிலையான வைப்புக்களை நோக்கி நிதி நகர்த்தப்பட்டமையால் வட்டிச் செலவுகள் 48% இனால் அதிகரித்தன. வட்டிக் கிரயங்கள் மீதான மேலதிக தாக்கங்கள், ரூபா 90 பில்லியனுக்கும் அதிகமான CASA தளத்தினால் பகுதியளவில் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக, வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 11,376 மில்லியனாக 17.2 % என்ற பாராட்டத்தக்க ஒரு வளர்ச்சியை பதிவு செய்திருக்கின்றது.

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 9 மாதங்களில் வங்கியின் தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் குறிப்பிடத்தக்க விதத்தில் 25% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மைய வங்கியியலுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல் கட்டணங்களில் ஏற்பட்ட முன்னேற்றமே இந்த வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. அதேநேரத்தில், தேறிய வணிக நடவடிக்கை வருமானம் அதிகரிப்பொன்றை (முன்னைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சந்தை விலைச்சீராக்க நட்டங்களோடு ஒப்பிடுகையில்) பதிவு செய்தது. அடிப்படை அரச பிணையங்களில் இருந்தான ஆதாயங்களில் ஏற்பட்ட சாதகமான போக்கே இவ்வதிகரிப்புக்கு காரணமாகியது.

ஒட்டுமொத்தமாக, இவ்வருடத்தின் ஒன்பது மாத காலப்பகுதியில் செலான் வங்கி மேற்கொண்ட சிறப்பான செயற்பாடுகளின் பயனாக வங்கியின் பங்கொன்றிற்கான உழைப்பு (EPS) ரூபா 8.20 இலிருந்து ரூபா 8.54 ஆக முன்னேற்றம் கண்டுள்ளது. சராசரி சொத்துக்கள் மீதான வங்கியின் வருமானம் (ROAA) 1.60% ஆக பதிவு செய்யப்பட்டதுடன், உரிமையாண்மை மீதான வருவாய் (ROE) 13.44% ஆகப் பதிவு செய்யப்பட்டது. 2017 செப்டம்பர் 30ஆம் திகதியில் இருந்தவாறு வங்கியின் ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூபா 92.53 (குழுமம் ரூபா 97.08) ஆகக் காணப்பட்டது.

2017 செப்டம்பர் 30ஆம் திகதி இருந்தவாறு வங்கியின் கிளை வலையமைப்பானது 167 வங்கியியல் நிலையங்கள், 203 ATM நிலையங்கள், 6 பணவைப்பு இயந்திர (CDMs) மையங்களை உள்ளடக்கியுள்ளது. இதன் மூலம் சிரமமற்ற வகையில் வாடிக்கையாளர்கள் சேவையை அணுகிப் பெறுவதற்கானவசதி அளிக்கப்படுகின்றது. உறவைக் கட்டியெழுப்புதல், சிறிய நடுத்தர முயற்சியாண்மை (SME) துறை, டிஜிட்டல் சேவை வழிமுறை மற்றும் விற்பனைகள் போன்ற விடயங்களை மையமாகக் கொண்ட '2020 மூலோபாயத் திட்டத்தை' நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் வங்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

செலான் வங்கியானது கல்வியை மையமாகக் கொண்ட தனது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) முன்னெடுப்புத் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற அதே நேரத்தில், வசதிகுறைந்த பாடசாலைகளுக்கான நூலகங்கள் செயற்திட்டத்தை விரைவுபடுத்தியிருக்கின்றது. இதன்படி 2017 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களிலும் மேலும் 19 பாடசாலை நூலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதன்படி இச்செயற்றிட்டத்தின் கீழ் இதுவரை மொத்தமாக திறக்கப்பட்டுள்ள நூலகங்களின் எண்ணிக்கை 139 ஆக அதிகரித்திருக்கின்றது. (ஆ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**11.11.1933**

யாழ்.பொது நூல் நிலையம் அமைக்கப்பட்டது.




## வலி.தென்மேற்கு பிரதேச சபையின்

# பொறுப்பற்ற செயற்பாடு

குறிப்பிட்ட பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட J/149 செட்டியடைப்பு வீதி அபிவிருத்தியானது மக்களின் தொடர் முயற்சியால் தற்போது வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளபடுகிறது.

ஆனாலும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் வீதியை நேரடியாக சென்று பார்வையிடாமல் அலுவலகத்தில் இருந்து மதிப்பீட்டையும், திட்டமிடலையும் மேற்கொண்டு இன்று வீதியின் நடுவே மின்சார கம்பத்தை வைத்து தார் ஊற்றபடுகிறது. அதைப்பற்றி மக்கள் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது மின்கம்பத்தை மாற்றி அமைப்பதற்கு பண ஒதுக்கீடு இல்லையாம். அதை பற்றிக் கேட்டால் அபிவிருத்தி வேலைகள் நிறுத்தப்படும் என மக்களை மிரட்டுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்யவா இல்லை மக்களை மிரட்டுவதற்கா அரச அதிகாரிகள்?

**-வாசகன், செட்டியடைப்பு.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எமனைக் கொன்ற நல்லூர்ச் சிவன்

யாழ்ப்பாணம், நவ.11


சிவபக்தனான மார்க்கண்டேயனை வதைக்க வந்த எமதர்மனை சிவபெருமான் வதைத்து மீண்டும் உயிர்ப் பிக்கச் செய்தமை தொடர்பான கதையே இமயசங்கார நிகழ்வாகும். இந்த நிகழ்வு நல்லூர் சிவன் கோவிலில் நேற்று வெள்ளிக்கிழமை மிகச்சிறப்பாக இடம்பெற்றது. (அ)

## மருத்துவக் கல்விக்கான திட்டவரைபு பூர்த்தி

மருத்துவ கல்விக்கு தேவைப்படும் குறைந்தளவு தராதரம் தொடர்பான திட்ட வரைபு பூர்த்தியாகி விட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டதை உறுதிப்படுத்தும் அறிக்கை வெளியானது. இதையடுத்து மருத்துவ பீடங்களுக்கு உள்வாங்கப்படும் மாண வர்களின் மருத்துவக் கல்வி அடிப்படை தகுதி மற்றும் தராதரம் தயாரிக்க ஜனாதிபதி விசேட குழுவை நியமித் திருந்தார்.

இந்தக் குழு தனது திட்டத் தயாரிப்பு பூர்த்தியாகி விட்ட தாக அறிவித்துள்ளது.




# கொட்டும் மழையிலும் சிரமதானம் உடுத்துறை துயிலும் இல்லத்தில்



கொட்டும் மழைக்கும் மத்தியிலும் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரம தானப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து இந்த சிரமதானப் பணிகளை மேற்கொண்ட னர். தமிழர் தாயகத்தில் இம்முறை மாவீரர் வாரத்தை உணர்வெழுச் சியுடன் கடைப்பிடிக்க மாவட்டங்கள் தோறும் குழுக்கள் அமைக்கப்பட் டுள்ளன.

இந்தக் குழுக்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றன. உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத் தில் சிரமதானப் பணி களை முன்னெடுக்க கடந்த திங்கட்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டது.

அழைப்பை ஏற்று ஒன்று கூடியவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்றையதினம் சிரம தானப் பணிகளை முன் னெடுத்தனர்.

# கூட்டமைப்பை உடைக்கக் கூடாது!

## விந்தன் கனகரட்ணம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

"உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற் றுமை அவசியமானது. அது எந்த வகை யிலும் பிளவுபட்டுப் போகக் கூடாது என்பதில் நாம் உறுதியாகப் பணி யாற்ற வேண்டும். அதுவே இப்போது எம் முன்னால் உள்ள சவலாகும்" என வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் அழைப்பில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களைச் சந்திப்ப தற்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென் றிருந்த சமயம், புலம்பெயர் செயற்பாட் டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் போட்டி யிடாமல் பொது முன்னணி ஒன்றில் களமிறங்கப் போவதாக ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரி வித்துவரும் நிலையிலேயே விந்தன் கனகரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குள் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைச் சிக்கல் நிலைக்குக் கொண்டு செல்லாது பேசித் தீர்ப்பது காலத்தின் கட்டாயம் ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் வெற்றிகளுக்காக உருவாக் கப்பட்டதல்ல. மாறாக அது தமிழ் மக்களின் உரிமைக்கான போராட் டத்தை ஜனநாயக வழிமுறைகளுக் குள்ளாகவும் விழுமியங்களுக்குள்ளா கவும் மேற்கொண்டு விடுதலைக்கு வலுச்சேர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

ஆயுதப்போராட்டம் வலுவிழந்த பின்னர் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு தமது ஆணையைப் பல சந்தர்ப்பங்களில் வழங்கியுள்ளனர். அச்சுறுத்தல்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் ஒற்றுமையை வலுப் படுத்துவதற்காக வாக்களித்துள்ளனர்.

மக்கள் தம்மிடம் நிலவும் அக வேற்றுமைகள் எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு தமது விடுதலைக் காக ஒரு குடையின் கீழ் செயற்படத் தக்க அரசியல் அங்கீகாரத்தையே கூட்டமைப்புக்கு வழங்கினர்.

. நமக்குள் பலதரப்பட்ட பிரச்சி னைகள் காணப்பட்டாலும் அவற் றைக் கூட்டமைப்பை பிளவுபடுத்தாத வகையான அணுகுமுறைகளை முன் னெடுத்துத் தீர்ப்பதற்கு முயல வேண்டும்.

முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள், அரசியல் தீர்வை அணுகுவதில் மென்போக்கு, வன்போக்கு உத்திகள் கூட்டமைப்புக்குள் காணப்பட லாம். நாம் வெவ்வேறு தளங்களில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்தவர் கள் என்ற வகையில் நமக்குள் அணுகு முறைகளில், சிந்தனைகளில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றமை மறுக்க முடியாததாகும். அவ்வாறு காணப்படும் கருத்து வேறுபாடுகளை அடிப்படையா கக் கொண்டு மோதல் நிலைக்குச் செல்லாது, கூட்டமைப்புக்குள் அக ரீதியிலான ஜனநாயக போக்குகளை உத்திகளுடன் மேம்படுத்துவதன் வாயிலாக தீர்ப்பதற்கு நாம் விளை வோமாயின், அது வரவேற்கத்தக்கது.

நமது அணுகுமுறைகள் கூட்ட மைப்பைப் பிளவுபடுத்துவனவாக அமையக் கூடாது. அடிப்படையில் கூட்டமைப்புக்கு வெளியில் நிற்கும் நியாயபூர்வமான சக்திகளையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதாக கூட்டமைப்பு பலப்படுத்தப்பட்டால் அது மக்களின் அரசியல் எதிர்பார்ப் பைச் சிதறடிக்காது மேலும் முன்நோக் கிச் செல்ல உதவும். ஒத்துழைப்பு பெரியது என்பதை என்றும் நினை வில் கொள்கின்றோம்.

இந்த இடத்தில் நான் பெரிது நீ பெரிது எனக் கொள்ளாது நாடு பெரிது என்ற மகோன்னத தத்துவத்தை நாம் நினைவுறுத்த வேண்டியுள்ளது. (அ)

# தொடர்ச்சிகள்

## காணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுவானது. இந்தக் காணிகளுக்காக எத்தகைய மாற்றீடுகளும் அவர்களுக்கு திருப்தியளிக்காது.

தமது காணிகள் விடுவிக்க வேண்டும் எனக் கேட்டு காணிகளின் வாசலில் 250 நாட்களுக்கும் மேலாக அவர்கள் போராடி வருகின்றனர். எனவே பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் உறுதியளித்தவாறு இம்மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் 133 ஏக்கர் காணிகளை விடுவிக்க வேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புனர்வாழ்வு அமைச்சர் டி. எம். சுவாமிநாதன், பாதுகாப்பு செயலாளர், இராணுவத்தலைமைக் கட்டளை அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## தின்பண்டங்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றனர்.

அத்துடன் அவர்களின் நடவடிக் கைகள் பொதுமக்களுக்கு இடையூறு களை ஏற்படுத்துவதாகவும், பாதுகாப்புக் குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காகவே ரயில் சேவை நடத்தப்படு கின்றது. எனவே பயணிகள் நலன் கருதி, அனைத்து விதமான வர்த்தக நடவடிக் கைகளுக்கும் தடை விதிக்கப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடமில்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஜனாதிபதி மேலும் தெரிவிக் கையில்:

'அழிவுகளில் இருந்து நாட்டைக் காப் பாற்ற உங்கள் உயிரை மதிக்காமல் நீங்கள் கடமையாற்றியுள்ளீர்கள். நாட்டின் அபி விருத்திக்கும், நல்லிணக்கம், ஒற்றுமைக்கும் உங்களின் ஆதரவு தொடர்ந்து தேவை. நாட்டின் தலைவராக நான் இருக்கும்வரை போர்க் குற்றத்துக்காக எந்த நீதிமன்றத்திலும் உங்களை நிறுத்த விடமாட்டேன்.

தவறு செய்த இராணுவத்தினர் நீதிமன் றில் நிறுத்தப்படுவதாக இருந்தால் நாட்டின் சட்டங்களுக்கு அமையவே நடவடிக்கை எடுப்பேன். எந்த வெளிநாட்டு நீதிபதிபதி யையும் விசாரிக்க அனுமதியேன். இதே போல் உலகின் எந்த மனித உரிமைகள் அமைப்புகளும் இராணுவத்தை கட்டுப்படுத்த விடமாட்டேன். அதிருப்தி அரசியல்வாதிகளும் ஓய்வு பெற்ற இராணு வத்தினர் சிலரும் போர் வீரர்களை தண்டிக்க முயற்சிப்பதாக கூறுகின்றனர். ஆதரமற்ற குற்றச்சாட்டுக்களை நம்ப வேண்டாம் - என்னை நம்புங்கள்" என்று கூறினார்.

இந்த சந்திப்பின்போது போர்க் குற்றங் களை காரணம் காட்டி வெளிநாடுகளால் விசா மறுக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் கமல் கல்லகே போன்றவர்களும் அங்கிருந்தனர்.

## தொண்டமானாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களத்தின் பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் என். சுதாகரன் விடுத்த இந்த எச்சரிக்கையை அடுத்து, அச்சுவேலி, மண்டான், புத்தூர், வாதரவத்தை, கோப்பாய் பகுதி மக்களிடையே அச்சநிலை தோன்றி யது. பெரும்பாலான மக்கள் தமது குழந்தை ளோடு உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று பாதுகாப்புத் தேடினர்.

இந்தத் திடீர் வெள்ளநிலைக்கு மிக முக் கிய காரணம், கைதடிப் பாலத்தில் நடை பெற்றுவரும் திருத்தவேலைகளே என பொறியியலாளர்கள் நேற்றிரவு 'எதிரொலிக் குத்' தெரிவித்தனர். வழக்கமாக தொண்ட மானாறு நீரேரியில் மழைக்கால வெள்ளம் கைதடிப் பாலத்தினூடாகவும், தொண்ட மானாற்றின் ஊடாகவும் கடலைச் சென்ற டையும். ஆனால் இம்முறை கைதடிப் பாலத்தில் திருத்தவேலைகள் நடைபெறு வதால், பாதுகாப்பு அணையாக மண் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி யூடாக, வெள்ளம் வடிந்தோட முடியாத நிலை தோன்றியுள்ளது.

அதேபோன்று தொண்டமானாற்றின் 14 மதகுக் கதவுகள் இரு நாட்களுக்கு முன்னரே திறக்கப்பட்டபோதும், வெள்ளம் வடிந்தோடும் வேகம் குறைவா கவே உள்ளதாக அதற்குப் பொறுப்பான பொறியியலாளர் தெரிவித்தார்.

சந்நிதித் திருவிழாவின் போது, தொண்டமானாற்றின் குறுக்காக கடந்த 5 வருடங்களாகப் போடப்பட்ட மண்மூடை களாலான பாதை, அகற்றப்படாததும் இவ் வாறு வெள்ளம் வடிந்தோட முடியாமல் இருப் பதற்குக் காரணமெனவும் கூறப்பட்டது.

தற்போது வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தால் இன்னும் நாலைந்து நாட்கள் மழை பெய்யும் சாத்தியங்கள் இருப்பதால், தொண்டமானாற்றுக் கரையோரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது.(அ)

## மழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடிக்கும் என்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான மழை கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் அச்சுவேலி, மண்டான், கோப்பாய் கரை யோரப் பிரதேசங்களில் கடல் நீர் மட் டம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள் ளது. தொடரும் மழை காலநிலையால் மக்கள் இடம்பெயர வேண்டி ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்மொழிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் நடவடிக்கை எடுக்கப்படும். நாடு முழுவதும் சர்வதேச தரம் வாய்ந்த பத்து தொழில் பயிற்சி மத்திய நிலையங்கள் அமைக் கப்படும். ஓட்டோ சாரதிகளின் தொழில் கௌரவமான தொழிலாக மேற்கொள்வதற் கான ஒழுங்குகள் முன்னெடுப்படும் என் று அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

இஸ்லாமாபாத், நவ.11

பாகிஸ்தானின் தென்மேற்குப் பலோசிஸ்தான் மாகாணத்தில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் உள்ளிட்ட மூன்று பேர் பலியாகினர்.

கடந்த ஆண்டு பலோசிஸ்தான் மாகாணம் தீவிரவாதிகளால் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகி இருந்தது. சுமார் 180 பேர் வரையில் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்திருந்த னர். குறித்த நகரில் சீனாவினால் 57 பில்லியன் டொலர் முதலீட்டில் பெரும் அபிவிருத்தி நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்தக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இதனால் குறித்த வேலைத்திட்டங்களுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (இ)

# சோதனை மேல் சோதனை

சென்னை,நவ.11

ஜெயா டிவி, நமது எம்.ஜி.ஆர். பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் தினகரன் உள்ளிட்டோர் வீடுகளில் இரண்டாவது நாளாக நேற்று வெள்ளிக் கிழமையும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

தமிழகத்தில் சசிகலாவின் உறவினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். ஜெயா டிவி அலுவலகம், போயஸ் கார்டனில் உள்ள பழைய ஜெயா டிவி அலுவலகம் என அனைத்து இடங்களிலும் இந்தச் சோதனை நடந்தது.

தமிழகம் மட்டுமின்றி புதுச்சேரி, கர்நாடகாவிலும் சோதனை நடத்தப் பட்டது. 187 இடங்களில் நடத்தப்பட்ட இந்தச் சோதனைகளில் ஏராள மான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சோதனை குறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் தரப்பில் கூறுகையில், "கைப்பற்றப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்துக்கொண்டு இருக்கிறோம். கூடுதல் ஆதாரம் இருப்பதாகக் கருதப்படும் இடங்களிலும், ஆவணங்கள் சிக்காத இடங்களிலும் சோதனையை நேற்று வெள்ளிக் கிழமையும் தொடர்ந்து நடத்தினோம். முழு அளவில் சோதனை முடிந்த பிறகுதான், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்களைப் பற்றிய தகவலைத் தெரிவிக்க முடியும்" என்றனர். (இ)

# பிரிட்டன் அமைச்சர் பதவி துறப்பு



லண்டன், நவ. 11

இஸ்ரேலியப் பிரதமரைச் சந்தித்த விட யத்தை மறைத்ததாக எழுந்த குற்றச்சாட் டால், பிரிட்டன் அமைச்சர் ஒருவர் பதவி யைத் துறந்துள்ளார்.

பிரிட்டனில் பிரதமர் தெரசா மே தலை மையில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. அவரது அரசில் கடந்த 2016 ஜூனில் சர்வதேச மேம்பாட் டுத் துறை அமைச்சராக இந்திய வம்சா வளியைச் சேர்ந்த பிரீத்தி படேல் பொறுப் பேற்றார். இதன்மூலம் பிரிட்டனின் முதல் இந்திய வம்சாவளி கேபினட் அமைச்சர் என்ற பெருமையைப் பெற்றார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் குடும்பத் துடன் இஸ்ரேலுக்குச் சுற்றுலா சென்றார். அங்கு அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட 12க்கும் அதிகமான அரசியல் தலைவர்களை இரகசியமாகச் சந்தித்துப் பேசியுள்ளார். இந்த சந்திப்புகள் குறித்து பிரிட்டன் பிரதமருக்கோ, வெளி யுறவுத் துறைக்கோதகவல்தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. அந்த வகையில் அமைச்சருக்குரிய ஒழுங்குவிதிகளை பிரீத்தி படேல் மீறியிருப்பதாகக் குற்றம் சாட்டப் பட்டது. இது தொடர்பாக கடந்த புதன் கிழமை பிரதமர் தெரசா மேவை, அமைச்சர் பிரீத்தி படேல் சந்தித்துப் பேசினார். அப்போது அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை பிரதமரிடம் அளித்தார்

.இந்த விவகாரம் குறித்து இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தி யில், "இஸ்ரேலியப் பயணம், சந்திப்புகள் குறித்து பிரதமர் அலுவலகத்தில் அமைச் சர் பிரீத்தி சிங் தெரிவித்திருந்தார். ஆனால் இஸ்ரேலியத் தலைவர்களைச் சந்தித்த தக வல்களை வெளியிட வேண்டாம் என்று பிர தமர் அலுவலகம்தான் பிரீத்தி சிங்கை அறி வுறுத்தியது" என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ)

# மத வன்முறையைக் களை அமெரிக்கா பரிசுத்தொகை



வோஷிங்டன்,நவ.11

இந்தியாவில் மத சகிப்புத்தன்மையை அதிகரிக்கவும், மத அடிப்படையிலான வன்முறைகளைக் குறைக்கவும் தன்னார் வத் தொண்டு நிறுவனங்களுக்கு சுமார் 5 இலட்சம் டொலர் (சுமார் ரூ.3.2 கோடி) பரிசளிக்கவிருப்பதாக அமெரிக்கா அறி வித்துள்ளது.

இந்தியாவில் மதச் சுதந்திரத்தை அதிகரிப்பதற்கான சிறந்த செயல்திட் டங்களைக் கூறும் தொண்டு நிறுவனங்க ளுக்குப் பரிசுத் தொகைகளை அளிக்க அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்ச கம் முடிவு செய்துள்ளது. மத அடிப் படையில் நிகழும் வன்முறைகளையும், பாரபட்ச நடவடிக்கைகளையும் குறைப் பதற்கான சிறந்த யோசனைகளை அளிக் கும் தொண்டு நிறுவனங்களுக்கு, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சுமார் 5 இலட்சம் டொலர் (சுமார் ரூ.3.2 கோடி) பரிசுத் தொகையாக வழங்கப் படும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஜனநாயக, மனித உரிமை மற்றும் தொழிலாளர் பிரிவு வெளி யிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது. (இ)

# சிகரெட்டுக்குத் தடை பாப்பரசர் அதிரடி



வத்திக்கான் , நவ.11

இத்தாலியில் உள்ள வத்திக்கான் நகரில் சிகரெட் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட் டுள்ளது. அதற்கான உத்தரவைப் பாப்பரசர் பிரான்சிஸ் பிறப்பித்துள்ளார்.

இத்தாலியில் அருகே உள்ள வத் திக்கான் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புனி தத் தலமாகத் திகழ்கிறது. இது பாப்பரசரின் ஆளுமையின் கீழ் உள்ளது. அங்கு தினமும் இலட்சக்கணக்கானவர்கள் வந்து செல்கின் றனர். இந்த நிலையில் இங்கு சிகரெட் விற் பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புனித நகரமான வத்திக்கானில் மக்களின் உடல்நலம் பாதிக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது என பாப்பரசர் தெரிவித்துள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு வெளியான ஒரு புத் தகத்தில் வத்திக்கானில் ஆண்டொன்றுக்கு ரூ.72 கோடி மதிப்பிலான சிகரெட் விற் பனை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. அதைக் கருத்தில் கொண்டே இந் தத்தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகி றது. (இ)

# ஹீரோயினாகும் ஜூலி



சென்னை,நவ.11

சில நாட்கள் முன்பு பிக்பாஸ் ஜூலியின் கழுத்தில் ஒருவர் கத்தி வைத்திருப்பது போன்ற புகைப்படம் வைரலானது. அது யார் எனத் தற் போது தெரியவந்துள்ளது. பிரபல விளம்பர பட இயக்குநர் பாபா பகுர்தீன் தான் அது.

இராமநாதபுரம் இலாஹி ஷாப்பிங் மாலுக்காக அவர் இயக்கிய விளம்ப ரப் படத்தில் ஜூலி நடித்துள்ளார். அப்போது எடுக்கப்பட்ட புகைப் படம் தான் அது. மால் உரிமையாளர் "ஜூலி வேண்டாம்" எனக் கூறியும் பகுர்தீன் பலமுறை வற்புறுத்தி ஒத்துக் கொள்ளவைத்துள்ளார்.மேலும் பகுர் தீன் இயக்கவுள்ள ஒரு படத்தில் ஜூலி ஹீரோயினுக்குச் சமமான வேடத்தில் நடிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட் டுள்ளது. (இ)

# நமீதாவுக்கு டும் டும் டும்



சென்னை,நவ.11

பல இளைஞர்களின் கனவுக் கன்னி நமீதாவுக்கு திருமணம் நிச் சயமாகியுள்ளது.

தமிழ் சினிமாவில் இருக்கும் பழைய நடிகைகளை ரசிகர்களால் மறக்க முடியாது. அப்படி முக்கியமாக இளைஞர் கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் நமீதா. இவர் சொல் லும் மச்சான்ஸ் என்ற வார்த்தைக்கே ரசிகர்கள் பலர் அடிமை.இவர் அண்மையில் பிரபல தொலைக் காட்சியில் நடந்த பிக்பாஸ் நிகழ்ச்சி யில் கலந்து கொண்டிருந்தார். நமீதாவுக்கு, வீர் என்பவருடன் வரும் நவம்பர் 24ஆம் திகதி திரு மணமாம். இந்த தகவலை நமீதா வின் நெருங்கிய தோழியும், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரைசா தன்னுடைய சமூக வலைதளத் தில் பகிர்ந்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாண்டியா அவுட்!

## அஷ்வின், ஜடேயாவுக்கு 'லக்'

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில், ஹர்திக் பாண்டியாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி மூன்று வகையான கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக இந்தியா சென்றுள்ளது. முதல் போட்டி கொல்கத்தாவில் எதிர்வரும் 16ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாகத் தொடர்ந்து இந்திய அணியில் இடம்பிடித்து வந்த



ஹர்திக் பாண்டியாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமீப காலமாக ஒருநாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட் தொடரில் இடம் பிடிக்காமல் இருந்த அஸ்வின், ஜடேஜா ஆகியோர் டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இந்திய அணி விவரம் வருமாறு:

விராட் கோலி (அணித்தலைவர்), லோகேஷ் ராகுல், முரளி விஜய், தவான், புஜாரா, ரகானே, ரோகித் சர்மா, சகா (விக்கெட் காப்பாளர்), அஸ்வின், ஜடேஜா, குல்தீப் யாதவ், மொகமது ஷமி, உமேஷ் யாதவ், புவனேஸ்வர் குமார், இசாந்த் ஷர்மா. (ஐ)

# பொம்மர்ஸுக்கு சிவப்பு அட்டை!



வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அதன் நிர்வாகம் என்பன ஒருவருட காலத்துக்கு போட்டிகளிலும், நிர்வாக செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு வடமராட்சி லீக்கினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வடமராட்சி லீக் கூட்டத்திலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த மைலோ கிண்ண போட்டிகளில் பங்கேற்க வடமராட்சி லீக்கின் அனுமதி பெறாமல் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கெடுத்தமையாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான பொம்மர்ஸ் மற்றும் டயமன்ஸ் ஆகிய அணிகள் மாவட்ட மட்ட மைலோ கிண்ணப் போட்டிகளுக்கு அழைக்கப்பட்டன.

அதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் போட்டிக்குச் சென்றது. வதிரி டயமன்ஸ் அணி செல்லவில்லை.

இதனாலேயே, வடமராட்சி லீக்கின் அனுமதியின்றி குறித்த தொடரில் பங்கேற்றமைக்காக இத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

எனினும், இத்தொடரில் பங்கேற்க வேண்டாம் என தமக்கு எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்பும் விடுக்கவில்லை என பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியப் படையைத் தகர்க்க நாங்கள் ரெடி!



"டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவின் சவாலை எதிர்கொண்டு அவர்களது பலத்தைத் தகர்க்க நாங்கள் தயாராக உள்ளோம்" என இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் சண்டிமால் கூறியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள இலங்கை அணி, இந்தியாவுடனான கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக இன்று பயிற்சியாட்டத்தில் களமிறங்கவுள்ளது.

இந்நிலையில்யே இலங்கை அணியின் தலைவர் தினேஷ் சண்டிமால் மேற்குறித்த கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த டெஸ்ட் தொடரில் நாங்கள் 6 துடுப்பாட்ட வீரர்கள், 5 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கி விளையாடினோம். அங்குள்ள காலநிலைக்கேற்றாற்போல் எமக்குப் பலன் கிடைத்தது.

4 பந்துவீச்சாளர்களுடன் விளையாடி வெற்றி பெறுவது எளிதான காரியம் அல்ல. ஆனால், இந்திய அணியில் சில மிகச்சிறந்த பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். அதனால் 5ஆவது பந்துவீச்சாளரின் இடத்துக்கு துடுப்பாட்டமும் செய்யக்கூடிய சகலதுறை வீரரைச் சேர்ப்பது குறித்து யோசிக்கிறோம். ஆடுகளத்தைப் பார்த்த பிறகு அதற்கு ஏற்ப திட்டமிடுவோம்.

இந்தியாவுக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள எங்களது வீரர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். இந்தத் தொடர் எங்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கடந்த கால போட்டிகளின் முடிவைத் திரும்பிப் பார்க்க விரும்பவில்லை. இந்தத் தொடருக்கு எங்களை நன்கு ஆயத்தப்படுத்தி வருகிறோம். வீரர்களும் நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

இந்திய மண்ணில் நாங்கள் ஒரு போதும் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றது கிடையாது. இங்கு டெஸ்டில் வாகை சூடுவது ஒவ்வொரு வீரர்களின் கனவாகும்." என்றார். (ஐ)

# பங்களாதேஷுக்கு ஹத்துரு டாட்டா



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்து வந்த இலங்கை அணியின் முன்னாள் வீரரான சந்திக்க ஹத்துருசிங்க, தனது பதவியை திடீரென ராஜிநாமாச் செய்துள்ளார்.

தனது பதவியை ராஜிநாமாச் செய்வதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்குக் கடிதம் அனுப்பி உள்ள அவர். தனது இந்த முடிவுக்கான காரணம் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

இலங்கை அணிக்கு தலைமைப் பயிற்சியாளர் ஒருவர் இல்லாத நிலையில், இலங்கை அணி அதற்கான இடத்தை நிரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அதன் அங்கமாக ஹத்துருசிங்கவுடனும் இலங்கைக் கிரிக்கெட் சபை பேச்சு நடத்திவரும் நிலையில், அவர் இந்த ராஜிநாமாமைச் செய்துள்ளதார்.

இதனால், அவர் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமனம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)


உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 11.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.